# சமாதான சங்கீதம்

**இராகம்—முகாரி, அடதாளம்.**

பல்லவி

**சஞ்சல மேன் மனமே சிவனடித்**
**தஞ்ச மான பினுமே.**

*சஞ்சலம் ஏன் மனமே சிவன்அடித்*
*தஞ்சம் ஆன பினுமே.*

அறுமுகச் சிவனுடைய திருவடிக்கு அடைக்கலம் ஆன பிறகும் ஏ மனமே! கவலை ஏன்?

அனுபல்லவி

**என்செயலாலொன்று மில்லையென்றேநின்றால்**
**ஏதந்துயரில்லையே—யிந்தச்**
**சூதை யறிகில்லையே. (சஞ்சல)**

என் செயலால் ஒன்றும் இல்லைஎன்றே நின்றால்
ஏதம் துயர் இல்லையே - இந்தச்
சூதை அறிகில்லையே. (சஞ்சல)

என்னுடைய செயல்களினால் எந்த ஒரு செயலும் நடப்பதில்லை என்று இருந்தால் கேடும் துன்பமும் இல்லை அல்லவா? இந்த நாடகத்தை ஏ மனமே! நீ அறியவில்லையே?

சரணம்

**வானமிடிந்துதலையில்விழும்படி**
**வம்புவந்தாலுமென்னை — யந்தக்**
**கானமயின்முருகையன்றிருவருள்**
**கைவிடமாட்டாதே. (சஞ்சல)**

வானம் இடிந்து தலையில் விழும்படி
வம்பு வந்தாலும் என்னை - அந்தக்
கான மயில் முருகுஐயன் திருவருள்
கைவிட மாட்டாதே. (சஞ்சல)

ஆகாயமே இடிந்து என் தலைமேல் விழும்படியாக ஏதேனும் பெரிய தீமை வந்தாலும், அப்போதும் என்னை அந்தச் சோலை மயில்மீது வரும் முருகப் பெருமானின் திருவருள் கைவிடாமல் காப்பாற்றும்!

**பன்னிருசூரிய ரொன்றாயெரிக்குங்கற்**
**பாந்தம்வந்தாலுமென்னை — யந்தப்**
**பன்னிருகட்சிவன் றண்ணளிநம்மைப்**
**பராமரித்துக்கொள்ளுமே. (சஞ்சல)**

பன்னிரு சூரியர் ஒன்றாய் எரிக்கும்கற்
பாந்தம் வந்தாலும் என்னை - அந்தப்
பன்னிரு கண் சிவன் தண்ணளி நம்மைப்
பராமரித்துக் கொள்ளுமே. (சஞ்சல)

பன்னிரண்டு சூரியர்களும் ஒன்றாய்ச் சேர்ந்துகொண்டு எரிக்கின்ற கற்ப காலத்தின் முடிவு வந்தாலும் என்ன? அந்தச் சோலை மயில்வாகனன் ஆன முருகப்பெருமானின் குளிர்ந்த அருளானது ஆதரித்துக்கொள்ளும்.

**செப்பவொணாப்பிழையெத்தனையோமுன்னர்ச்**
**செய்திருந்தாலுமென்னை – நம்மை**
**எப்பொழுதும்புரந்தாள்குகப்பிரமத்**
**திகலருண்முன்னிறுமே. (சஞ்சல)**

*செப்ப ஒணாப் பிழை எத்தனையோ முன்னர்ச்*
*செய்து இருந்தாலும் என்னை - நம்மை*
*எப்பொழுதும் புரந்து ஆள் குகப்பிரமத்து*
*இகல் அருள் முன் இறுமே. (சஞ்சல)*

சொல்ல முடியாத அளவு குற்றங்கள் எவ்வளவோ முன்பு செய்திருந்தாலும் என்ன? அவன் அடியாராகிய நம்மை எப்பொழுதும் காத்தருளும் குகப் பிரமத்தின் வலிமையான அருளால் அக்குற்றங்கள் அனைத்தும் ஒழியும்.

**நாலேழுநாலுந்தெளிவாகவோதிமெய்ஞ்**
**ஞானஞ்சொன்னாலுமென்னை – யந்த**
**மூலப்பிரணவசாமிதயாவின்றி**
**முன்னேறுவதில்லையே. (சஞ்சல)**

*நால் ஏழு நாலும் தெளிவாக ஓதி மெய்ஞ்*
*ஞானம் சொன்னாலும் என்னை - அந்த*
*மூலப் பிரணவசாமி தயா இன்றி*
*முன்னேறுவது இல்லையே. (சஞ்சல)*

நான்கு ஏழு = இருபத்தெட்டு. மேலும் நான்கு கூட்ட மொத்தம் = 32. இந்த முப்பத்திரண்டு ஞான நூல்களையும் ஐயம் திரிபறக் கற்றுப் பிறருக்கு மெய்யறிவை எடுத்துச் சொன்னாலும், அந்த மூலப்பொருளான ஓங்கார குருநாதன் திருவருள் இன்றி முத்திப்பேற்றை அடையும் முயற்சியில் முன்னேற முடியாது! (28 சிவாகமம் + 4 வேதங்கள் = 32)

**காஷாயம்வற்கலைபூண்டுசன்னாசியாய்க்**
**காடுறைந்தாலுமென்னை – யந்தக்**
**காலுந்தலையுங்கடந்தநிலைதன்னைக்**
**கண்டபின்பன்றோகிட்டும். (சஞ்சல)**

*காஷாயம் வற்கலை பூண்டு சன்னாசியாய்க்*
*காடு உறைந்தாலும் என்னை - அந்தக்*
*காலும் தலையும் கடந்தநிலை தன்னைக்*
*கண்ட பின்பு அன்றோ கிட்டும். (சஞ்சல)*

காவி ஆடை அல்லது மரப்பட்டையினால் ஆன ஆடை அணிந்து துறவியாகிக் காட்டிலே வசித்தாலும் என்ன பயன்? அந்தப் பிராணவாயுவும் ஆகாசமும் ஆகிய இரண்டையும் கடந்த நிலையை அறிந்த பின்பல்லவோ, அந்த முத்திப் பேறு கிடைக்கும்! (பிராணவாயு = சாகாக்கலை; சிதாகாசம் = வேகாத்தலை).

**பொன்னாசை பெண்ணாசை மண்ணாசை மூன்றையும்**
**போக்கடித்தாலு மென்னை – கேளுன்**
**தன்னாணை ஞானமொன்றே தன்னைக் காட்டுந்**
**தலைவனிடங் கூட்டும். (சஞ்சல)**

*பொன் ஆசை பெண் ஆசை மண் ஆசை மூன்றையும்*
*போக்கடித்தாலும் என்னை -கேள் உன்*
*தன் ஆணை ஞானம் ஒன்றே தன்னைக் காட்டும்*
*தலைவனிடம் கூட்டும். (சஞ்சல)*

பொன்னின் மீதும், பெண்ணின் மீதும், மண்ணின் மீதும் வைத்துள்ள மூவகை ஆசைகளையும் நீக்கி விட்டாலும் என்ன பயன்? கேட்பாயாக! உன்னுடைய சத்தியால் வழங்கப்படும் அருள் என்னும் ஞானம் ஒன்றே உன்னையும் காட்டும்; பின்பு உன் தலைவனிடம் சேர்க்கும்!

**ஒன்பதுபத்தாறுதத்துவமெல்லா**
**மொடுக்கியிருத்தலினுங் – குகன்**
**அன்பருள்கொண்டுசின்முத்திரைதன்னினில்**
**லானந்தங்கைவல்யமே. (சஞ்சல)**

ஒன்பது பத்து ஆறு தத்துவம் எல்லாம்
ஒடுக்கி இருத்தலினும் - குகன்
அன்பு அருள் கொண்டு சின்முத்திரை தன்னில்நில்
ஆனந்தம் கைவல்யமே. (சஞ்சல)

தொண்ணூற்றாறு தத்துவங்கள் எனப்படும் அனைத்தையும் வென்று ஒடுக்கி இருத்தலைக் காட்டிலும், குகப்பெருமானிடம் அன்பு செய்து அவன் அருளுக்குப் பாத்திரமாகி, மௌன ஞான யோகத்தைக் கடைப்பிடித்தால் பேரின்ப முத்தி நிச்சயம்.

**முத்திதருங்குகப்பிரமத்தைவாழ்த்திய**
**முத்தனண்ணாமலையா – னிரு**
**பத்மவடிக்கன்புபண்ணிடுதாசர்**
**பரகதியெய்துவரே. (சஞ்சல)**

முத்திதரும் குகப்பிரமத்தை வாழ்த்திய
முத்தன் அண்ணாமலையான் - இரு
பத்ம அடிக்கு அன்பு பண்ணிடு தாசர்
பரகதி எய்துவரே. (சஞ்சல)

பேரின்ப முத்தியை அளித்தருளும் குகப்பிரமத்தை வணங்கி முத்திப் பேற்றை அடைந்த அருணகிரிநாதருடைய இரண்டு தாமரைத் திருவடிகளுக்கு, அன்பு செய்திடும் அடியார் மேலான கதியை அடைவர்.

**திருச்சிற்றம்பலம்**

**சுபானு ஆண்டு சித்திரை மாதம் முதல் நாள் (14-04-2003) திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு பஞ்சவிம்சதிஅதிகசதபங்கி உரை எழுதி முடிக்கப்பெற்றது.**

**முதன் மண்டலமாகிய**
**குமரகுருதாச சுவாமிகள் பாடல் முற்றிற்று.**

*குமரகுருபரன் திருவடி வாழ்க*
*திருச்சிற்றம்பலம்.*